**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி. ஆர்.எல். பிரியதர்ஷினி, பி.ஏ., பி.எல்.,**

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

திருநெல்வேலி. (மு.கூ.பொ)

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ம் நாள் திங்கள்கிழமை

**I.A.No.1/2024 in O.S.No.65/2024**

தமிழ்நாடு கிராம வங்கி
கங்கைகொண்டான் கிளை
அதன் கிளை மேலாளர் மூலம் ...மனுதார்/வாதி

/Vs/

1)தளவாய்சாமி
2) இளந்தென்றால் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்நீதிமன்றம் முன்பாக 09.02.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கிருஷ்ணராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ராஜேஷ் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை ஆராய்ந்தும் இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இவ்வழக்கில் எதிர்மனுதாரர்கள் ரூ.90,000/- மதிப்பிற்கு செக்யூரிட்டி மாண்புமிகு நீதிமன்றம் குறிப்பிடுகிற தேதிக்குள் தாக்கல் செய்யுமாறும், தவறும் பட்சத்தில் தபசில் சொத்தை தீர்ப்பிற்கு முன்பு பற்றுகை (Attachment Before Judgment) உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் விசாரணை

முறை சட்டம் கட்டளை 38 விதி 5 மற்றும் 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) எதிர்மனுதாரர்கள், மனுதாரர் வங்கியை அணுகி வங்கியின் சட்ட திட்டங்களுக்கு முழுமையாக ஒப்புக்கொண்டு K.C.C பயிர் கடன் கோரி விண்ணப்பித்தன் அடிப்படையில் ரூ.99,000/– அனுமதிக்கப்பட்டது. மேற்படி அனுமதிக்கப்பட்ட தொகையில் பயனாளிகள் தேவையான தொகையை மட்டும் கடன் கணக்கில் பெற்றுக்கொள்ளலாம் என்பது நடைமுறையாகும். அதன்படி 15.12.2017 அன்று ரூ.50,000/–ஐ கடனாக பெற்றுக்கொண்டு கடன் தொகைக்கு தேவையான பிராமசரி நோட், Letter of Undertaking உட்பட மனுதாரர் வங்கியின் பெயருக்கு எதிர்மனுதாரர்கள் எழுதிக்கொடுத்துள்ளார்கள்.

2.2) எதிர்மனுதாரர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை செலுத்தாமல் நாள்கடத்தி வருவதால் மேற்படி தொகையை வசூலித்திட அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் தீர்ப்பு பிறப்பித்து தீர்ப்பு தொகையை வசூல் செய்வதை தடுக்கும் வகையில் எதிர்மனுதாரர் தபசில் சொத்தை விற்பனை செய்துவிட்டால் வாதி வங்கியால் எதிர்மனதாரரிடமிருந்து வசூல் செய்ய இயாமல் செய்யாமல் போய்விடும். எனவே தீர்ப்புக்கு முன்பு மனு தபசில் சொத்தை பொறுத்து பற்றுகை உத்தரவு பிறப்பிக்க வேண்டி இந்த மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1, 2 எதிர்மனுதாரர்கள் எதிருரையாக ஏற்றுக்கொண்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்**

4) பிரதிவாதிகள் வாங்கிய கடன் தொகையில் பகுதி தொகையை வங்கியில் செலுத்திவிட்டார்கள். மனுதாரர் தாக்கல் செய்துள்ள

ஆவணங்கள் அனைத்தும் மனுதாரர் வங்கியால் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகும். மனுதாரரின் வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**5) வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.**

6) எதிர்மனுதாரர்கள் 14.12.2017 அன்று கடன் வேண்டி மனுதாரர் வங்கியில் விண்ணப்பித்துள்ளார்கள் என்பதும் எதிர்மனுதாரர்கள் 15.12.2017 அன்று கடனுறுதி பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்பதும் 15.12.2017 அன்று கடன் ஏற்பு கடிதம் எழுதிகொடுத்துள்ளார்கள் என்பதும் 15.12.2017 அன்று உறுதிமொழி கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்பதும் 15.12.2017 அன்று கொதுவை ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள் என்பதும் 24.07.2020, 20.04.2023 ஆகிய தேதிகளில் எதிர்மனுதாரர்கள் கடன் ஏற்பு கடிதம் மனுதாரர் வங்கிற்கு எழுதிக் கொடுத்தார்கள் என்பதும் வாதி வங்கியிலிருந்து எதிர்மனுதாரர்களுக்கு 07.01.2023 அன்று அறிவிப்பு அனுப்பபட்டு அந்த அறிவிப்புகளை எதிர்மனுதாரர்கள் பெற்றுக்கொள்ளாததால் திரும்பி வந்தது என்பதும் எதிர்மனுதாரர்கள் 76,051/— ரூபாய் வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ளது என்பதும் வழக்குரையுடன் மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் இருந்து தெரியவருகிறது.

7) எனவே மனுதாரருக்கு ரூ.76,051/— எதிர்மனுதாரர்கள் செலுத்த வேண்டிய கடமையுள்ளது என்பது முதல் நோக்கில் தெரியவந்ததால் இந்நீதிமன்றம் 07.10.2025 அன்று எதிர்மனுதாரர்கள் உத்திரவாதம் அளிக்க வேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் போதிய

வாய்ப்பு அளித்த பின்பும் எதிர்மனுதாரர்கள் மேற்படி தொகைக்கு உத்திரவாதம் அளிக்கவில்லை. மேலும் எதிர்மனுதாரர்கள் மனு தபசில் சொத்தை விற்பனை செய்துவிட்டால் மனுதாரரால் எதிர்மனுதாரர்களிடம் இருந்து தீர்ப்பு தொகையை வசூல் செய்ய இயலாமல் போய்விடும் என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட காரணம் இந்நீதிமன்றத்தால் எற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது. எனவே இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**8) இறுதியாக**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.03.10 17:07:37 +0530

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிபதி, திருநெல்வேலி (மு.கூ.பொ)

<u>மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> – இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> – இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.03.10 17:07:48 +0530

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி (மு.கூ.பொ)

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்

நீதிமன்றம், திருநெல்வேலி.

**I.A.No.1/2024 in O.S.No.65/2024**

சீரான – உத்தரவு

**நாள்–09.03.2026**